தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க.எண். 1216/இ1/2021, நாள். 22.03.2022

-----

பொருள் : மெட்ரிகுலேசன் பள்ளிகள் - குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 – சட்டப்பிரிவு 12(1) (சி) இன்படி 25% இட ஒதுக்கீடு – 2013-2014 முதல் 2021-2022 ஆம் கல்வியாண்டு வரை சேர்க்கை செய்யப்பட்டு தொடர்ந்து பயின்று வரும் மாணாக்கர்களின் வருகைப் பதிவினை EMIS இணையதளத்தின் வருகைப் பதிவு செயலியில் (Attendance App) பதிவேற்றம் செய்ய அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்கக மின்னஞ்சல் நாள். 21.03.2022

-------

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப்பிரிவு 12(1)(சி) இன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப்பள்ளிகளில் (மெட்ரிகுலேசன் பள்ளிகள் / மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள்/பள்ளிக் கல்வி ஆணையரின் நிர்வாகத்தின்கீழ் வரும் சுயநிதிப் பள்ளிகள்) 25% இட ஒதுக்கீட்டின் கீழ் 2013-2014 முதல் 2021-2022 ஆம் கல்வியாண்டு வரை சேர்க்கை செய்யப்பட்டு தொடர்ந்து பயின்று வரும் மாணவர்களின் தினசரி வருகை பதிவினை 01.04.2022 முதல் (எல்.கே.ஜி முதல் எட்டாம் வகுப்பு வரை) EMIS இணையதளத்தின் வருகைப் பதிவு செயலியில் (Attendance App) பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

எனவே, இது சார்ந்து TNEMIS இணையதளத்தில் கீழ்க்குறிப்பிட்ட திரைவெட்டை (Screen shot) பின்பற்றி பதிவேற்றம் செய்யுமாறு அறிவுத்தப்படுகிறது.




தபி.பா

மேற்காண் இணையதளத்தில் இத்திட்டத்தின் கீழ் பயிலும் மாணாக்கர்களின் பெயர்கள் விடுபடாமல் (எல்.கே.ஜி முதல் எட்டாம் வகுப்பு வரை) 30.03.2022 க்குள் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் (சேர்க்கை அல்லது நீக்கம்) செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், இப்பதிவுகளில் ஏதேனும் மாணாக்கர்கள் விடுபட்டால் பின்வரும் காலங்களில் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கலாகிறது.

மேற்காண் திட்டத்தின் கீழ் பயிலும் மாணாக்கர்களுக்கு 01.04.2022 முதல் தினசரி வருகை பதிவு EMIS இணையதளத்தில் மேற்கொண்டால் மட்டுமே இத்திட்டத்தின் மூலம் சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கல்விக் கட்டண கேட்புத் தொகை பள்ளிகளுக்கு ஈடுசெய்யப்படும். அவ்வாறு வருகைப் பதிவு தினசரி மேற்கொள்ளாவிடின் அந்த மாணாக்கர்களுக்குரிய கல்விக் கட்டண கேட்புத் தொகையை பள்ளிகளுக்கு ஈடு செய்யப்பட மாட்டாது எனத் தெரிவிக்கலாகிறது.

எனவே, இப்பொருள் தொடர்பாக சார்ந்த பள்ளிகளுக்குத் தக்க அறிவுரை வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், சார்ந்த மாவட்ட கல்வி அலுவலர்கள்/வட்டாரக் கல்வி அலுவலர்களைக் கண்காணிக்க அறிவுறுத்துமாறும், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

22/3/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

22/3/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. ஆணையர், பள்ளிக்கல்வி, சென்னை -06. (தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது).
2. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி சென்னை -06. (தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது).
3. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை -06. (தகவலுக்காகவும், தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் கனிவுடன் அனுப்பலாகிறது).